**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.**

**ஏப்ரல் 2024 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு**

**தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் பதிவிறக்கம் செய்தல் &**

**விடைத்தாள் நகலுக்கு விண்ணப்பித்தல்**

**செய்திக்குறிப்பு**

**தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் பதிவிறக்கம் செய்தல்:**

ஏப்ரல் 2024 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதிய பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளி தலைமையாசிரியர்கள் வழியாக தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்கள் 13.05.2024 முதல் பெற்றுக் கொள்ளலாம் அல்லது https://dge.tn.gov.in/ என்ற இணையதளத்தில் Notification பகுதியில் சென்று SSLC March/April−2024 – Provisional Certificate பக்கத்தில் தங்களது பிறந்த தேதி, பதிவெண் ஆகிய விவரங்களை அளித்து தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தனித்தேர்வர்கள் https://dge.tn.gov.in/ என்ற இணையதளத்தில் Notification பகுதியில் சென்று SSLC March/April – 2024 –Provisional Certificate பக்கத்தில் தங்களது பிறந்த தேதி, பதிவெண் ஆகிய விவரங்களை அளித்து தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**பத்தாம் வகுப்பு தேர்வர்கள் – விடைத்தாள் நகல் விண்ணப்பிக்கும் முறை:**

அரசாணை (நிலை) எண்:211 பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை நாள்:18.11.2023 அரசாணை அடிப்படையில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு கோரும் மாணவர்கள் முதலில் விடைத்தாள் நகலுக்கு (SCAN COPY) விண்ணப்பித்து பெற்ற விடைத்தாள் நகலை மாணவர்கள் ஆய்வு செய்து, பின்னர் இத்துறையால் அறிவிக்கப்படும் நாட்களில் மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பிக்க விரும்பும் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள் வழியாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வழியாகவும் 15.05.2024 ( **புதன்கிழமை**) **காலை 11.00 மணி** முதல் 20.05.2024 ( **திங்கட்கிழமை**) **மாலை 5.00 மணி (ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக)** வரை விண்ணப்பிக்கலாம். பத்தாம் வகுப்பு ஸ்கேன் (scan copy) –க்கு விண்ணப்பிப்பவர்கள் மட்டுமே மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க இயலும்.

| | | | |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் பதிவிறக்கம் செய்யும் நாட்கள் | 13.05.2024 முதல் | https://dge.tn.gov.in/ |
| | விடைத்தாள் நகல் விண்ணப்பிக்கும் நாட்கள் | 15.05.2024 முதல் 20.05.2024 வரை | பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள்/ தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் |

விடைத்தாளின் நகல் (Scanned Copy of the answer script) பெறுவதற்கான கட்டணம்:

ஒவ்வொரு பாடத்திற்கும் – ரூ.275/-

பணம் செலுத்தும் முறை:

தேர்வர்கள் விடைத்தாள்களின் நகலிற்கான கட்டணத்தை விண்ணப்பிக்கவுள்ள பள்ளியிலேயே பணமாகச் செலுத்த வேண்டும்.

விடைத்தாள் நகல் – இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளும் முறை :

விடைத்தாள் நகல் விண்ணப்பிக்கும்போது வழங்கப்படும் ஒப்புகைச் சீட்டினை மாணவர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். ஒப்புகைச் சீட்டில் குறிப்பிட்டுள்ள விண்ணப்ப எண்ணைப் பயன்படுத்தியே தேர்வர்கள் தங்களது விடைத்தாளின் நகலினை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விடைத்தாளின் நகலினை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய நாள் மற்றும் இணையதள முகவரி பின்னர் ஊடகங்கள் வாயிலாகவும் மற்றும் இவ்வலுவலக இணையதளத்திலும் (https://dge.tn.gov.in/) வெளியிடப்படும்.

ஒம்/-
**இயக்குநர்**

இடம்: சென்னை-6.
நாள்: 10.05.2024